## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை - 2023

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் (''அதிகாரசபை'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமம் பொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 451,545,750 கிரயத்தை கொண்ட முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 - ஆதனம், பொறி மற்றும் | 2023 ஆம் ஆண்டில் இந்தச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இற்றைப் பெறுமதிகள் மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன் மதிப்பாய்வு | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இற்றைப் பெறுமதியை மதிப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருந்த போதிலும் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இற்றைப் பெறுமதியை மதிப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயன்முறையானது 2024 பெப்ரவரியில் நிறைவடைந்தது. எனவே, நியமத்தின் பிரகாரம் கணக்கீட்டு பரிகாரமானது 2024 ஆம் ஆண்டிலிருந்து பிரயோகிக்கப்படலாம். | வேண்டும். |
| (ஆ) | பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 07 இன் 69 ஆம் பந்திக்கு முரணாக கொள்வனவு செய்த ஆண்டு முழுவதும் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அகற்றப்பட்ட ஆண்டிற்காக பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. அதன் பிரகாரம், உரிய கணக்கீட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | அதற்கிணங்க கணக்கீட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஐயக்கடன் ஏற்பாட்டை கணிப்பிடுவதற்கு முன்னர் அதிகாரசபையின் குத்தகைதாரர்களால் வழங்கப்பட்ட ரூபா 10,721,715 மீளளிக்கத்தக்க வைப்பு வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளில் இருந்து கழிக்கப்படுவதற்குப் பதிலாக ஐயக்கடன் ஏற்பாட்டு பெறுமதியிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. மேலும், கடன்பட்டோர் கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,196,786 தொகையான கடன் மீதிகள் ஐயக்கடன் ஏற்பாட்டை கணிப்பிடும் போது கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டிய மீதியிலிருந்தும் கழிக்கப்பட்டிருந்தது. இதனால் ஐயக்கடன் ஏற்பாடு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஆம் நிதியாண்டில் வியாபார கடன்பட்டோரின் பதிவேடுகளில் தொடர்புடைய திருத்தம் மேற்கொள்ளப்படும். | ஐயக்கடன் ஏற்பாடு, மீளளிக்கத்தக்க வைப்பு மற்றும் கடன்பட்டோர் கடன் மீதி என்பன தனித்தனியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியதுடன், அவற்றை எதிரீடு செய்யக்கூடாது. |
| (ஆ) | ஆண்டின் போது ரூபா 46,313,360 பெறுமதியான மத்திய வளிப்பதனாக்கி முறைமையானது மின்சார நிறுவல் கணக்கிலிருந்து கட்டிடக் கணக்கிற்கு மாற்றப்பட்டு 20 சதவீத விலைவிகிதத்தில் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | இது தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனினும், இது தொடர்பான கணக்குகளில் எந்த வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | யால மற்றும் பாசிக்குடா சுற்றுலா அபிவிருத்தி வலயங்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 328,000,000 பெறுமதியான பல காணித் துண்டுகள் மீளாய்வாண்டில் முதலீட்டுச் சொத்தாக மீளவகைப்படுத்தப்பட்டிருந்தன. இந்தத் தொகை இரண்டு முறை தொடர்புடைய கணக்குகளில் சீர்செய்யப்பட்டிருந்ததால் இந்தத் தொகையால் முதலீட்டுச் சொத்து அதிகரித்துக் காட்டப்பட்டதுடன் காணி குறைத்துக் காட்டப்பட்டது. | 2024 ஆம் நிதியாண்டிற்குள் உரிய திருத்தம் செய்யப்பட்டது. | நாட்குறிப்பு பதிவின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை சீர்செய்வதற்கும் இதுபோன்ற பிழைகளைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பாசிகுடா மற்றும் பெந்தோட்ட PA ஓய்வு இல்லங்களின் காணிகள் தொடர்பான காணிப் பதிவேட்டின் பிரகாரமான காணிகளின் பெறுமதிக்கும் தொடர்புடைய முதலீட்டுச் சொத்துக் கணக்கின் மீதிக்கும் இடையில் ரூபா 325,675,000 கூட்டுமொத்த வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. எனவே முதலீட்டுச் சொத்து மற்றும் மீள்மதிப்பீட்டு ஆதாயம் என்பன இந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டன. | 2024 ஆம் நிதியாண்டிற்குள் உரிய திருத்தம் செய்யப்பட்டது. | நாட்குறிப்பு பதிவுகளின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை சீர்செய்வதற்கும் இதுபோன்ற பிழைகளைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | ரூபா 214,818,648 தொகையான சரியான நிலையான வைப்பு வட்டியானது ரூபா 112,877,545 தொகை குறைக்கப்பட்டு ரூபா 101,941,103 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், நிலையான வைப்பு பெறுமதியானது ரூபா 1,368,750,000 இற்கு பதிலாக ரூபா 118,750,000 குறைக்கப்பட்டு ரூபா 1,250,000,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பெறவேண்டிய வட்டி கணக்குகளில் ரூபா 255,736 குறைக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், நிலையான வைப்பு வட்டி மீதான ரூபா 13,135,042 பிடித்துவைத்தல் வரி கணக்கீடு செய்யப்பட்டிருக்காததால் வருமான வரிச் செலவினம் அதிகரித்திருந்தது. | மீளமுதலீடு செய்யாமல் ”நிதிய முகாமைத்துவ சேமிப்புக் கணக்கிற்கு” வட்டியை மாற்றுமாறு வங்கிக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. எனினும், வங்கி பணிப்புரையை பின்பற்றியிருக்கவில்லை. மேலும் அதில் வேறுபாடு ஏற்பட்டது. | வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை சீர்செய்வதற்கும் இதுபோன்ற பிழைகளைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய ஏட்டின் பிரகாரம் ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்திடமிருந்து பெறவேண்டியவை | 42,104,132 | 38,473,520 | 3,630,612 | | |
| (ஆ) | இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்திடமிருந்து பெறவேண்டியவை | 9,957,640 | - | 9,957,640 | இந்த வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு, அதற்கேற்ப கணக்குப் புத்தகங்களில் திருத்தம் செய்யப்படும். | மீதிகள் அவ்வப்போது இணக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் வேறுபாடுகளைத விர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்தவ நிறுவகத்திற்கு செலுத்த வேண்டியவை | 6,512,810 | 243,528,033 | 237,015,223 | | |
| (ஈ) | சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெறவேண்டியவை | 408,683,267 | 342,574,074 | 66,109,193 | இந்த மதிப்பீட்டு பிழை 2024 ஆம் நிதியாண்டில் தலைகீழாக மாற்றப்படும். | |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மொத்த வியாபாரக் கடன்பட்டோரில் 25 சதவீதமாக இருந்த ரூபா 70,008,231 கூட்டுமொத்தமான வியாபார கடன்பட்டோர் 03 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் நாயகம் நிலுவைகளை அறவிடுவதற்கு நிதி முகாமைத்துவ பணிப்பாளர், சட்டம், அபிவிருத்தி மற்றும் ஏனைய விசேட ஊழியர்களைக் கொண்ட குழுவை நியமித்துள்ளார். | கடன்பட்டோரை கடன் காலத்துக்குள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் காலதாமதமான கடன்பட்டோரிற்கு மேலதிகக் கட்டணம் விதிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான மொத்த நானாவித கடன்பட்டோரில் 91 சதவீதமான ரூபா 5,668,578 தொகையான நானாவித கடன்பட்டோர் 04 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், நானாவித கடன்பட்டோரில் ரூபா 559,961 தீர்க்கப்படாத ஆரம்ப மீதியொன்று இருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறதுடன் இந்த மீதிகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோரை கடன் காலத்துக்குள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் காலதாமதமான கடன்பட்டோரிற்கு மேலதிகக் கட்டணம் விதிக்கப்பட வேண்டும். |
| (இ) | வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக முச்சக்கர வண்டி சாரதிகளுக்கான அதிகாரசபையின் ”ருக் ருக் நிகழ்ச்சித்திட்டத்திற்கான” நிதிப் பங்களிப்பை மீள்நிரப்பு செய்வதற்கு சுற்றுலா அமைச்சு இணங்கியிருந்தது. எனினும், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ரூபா 13,227,648 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக சுட்டிக்காட்டப்பட்ட SLTDA புத்தகக் கணக்குகளில் இருந்து அந்தத் தொகையை பதிவழிப்பதற்கு உரிய அங்கீகாரத்தை நாங்கள் கோருகிறோம். | 2024 ஆம் ஆண்டில் மீதியை அறவிடுவதற்கு/ பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 இல் விடுமுறை விடுதியொன்றிலிருந்து பெறப்பட்ட ரூபா 200,000 தொகையான காசோலையானது கடன்பட்டோர் மீதியை உருவாக்காமல் கணக்குகளில் திரும்பிய காசோலையாகவே இருந்தது. மேலும் அந்தத் தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | கடன்பட்டோர் மீதியை மீளக்குறிப்பிடுவதற்கும் விரைவில் அறவிடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 34 விருந்தினர் இல்லங்களிலிருந்து பெறப்பட வேண்டிய நிலுவை வாடகை வருமானத்தின் மொத்த பெறுமதி ரூபா 29,831,815 ஆகும். இதில் 4 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக உள்ள வாடகை வருமானம் ரூபா 10,167,445 அல்லது மொத்த நிலுவையில் 34 சதவீதமாகும். மேலும் அறவீட்டு செயன்முறை திருப்திகரமான அளவில் இல்லை. மேலும் 04 வருடங்களுக்கு மேலாக வெற்றிடமாக இருந்த 07 விருந்தினர் விடுதிகள் நாளதுவரை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | வாடகை வருமான நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மூடப்பட்ட பென்தோட்ட கடைகளில் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 989,826 கூட்டுமொத்தமான மீதி 07 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் அறவீட்டுக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம், முறையான அங்கீகார நடைமுறையைப் பின்பற்றி சம்பந்தப்பட்ட கணக்கில் இருந்து கடன்பட்டோர் மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிசீஆர் மற்றும் காப்புறுதி தொடர்பாக சேவை வழங்குநர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 179,654,720 தொகையான மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்படி மீதி தொடர்பான வயதுப் பகுப்பாய்வு பெறப்பட்டிருக்கவில்லை. | சேவை வழங்குநர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை காணப்படவில்லை என்பதையும், கொடுக்கல்வாங்கல்களின் தன்மையைக் கருத்தில் கொண்டு இந்த "செலுத்தப்பட வேண்டிய பிசீஆர் மற்றும் காப்புறுதி" பேரேட்டுக் கணக்கின் வயதுப் பகுப்பாய்வைத் தயாரிப்பது நடைமுறையில் காணப்படவில்லை என்பதையும் குறித்துக்கொள்ளவும். எனவே தங்கள் அவதானிப்புடன் இணங்கவில்லை. | செலுத்தப்பட வேண்டிய தொகையை தீர்வு செய்து இதை வருமானமாக கருதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பாசிக்குடா உல்லாச விடுதியில் நீர் விநியோகம் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 67,195,229 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்படி மீதி தொடர்பான வயதுப் பகுப்பாய்வு பெறப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதி தற்போது சீர்செய்யப்பட்டு வருகின்றதுடன் 2024 ஆம் நிதியாண்டிற்குள் சீர்செய்யப்படும். | மீதி இணக்கம் செய்யப்பட வேண்டியதுடன் விரைவாக சீர்செய்யப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 9,915,544 தொகையான பிடித்துவைத்தல் பணம் 05 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த மீதிகள் பல்வேறு காரணங்களால் நிறுத்தப்பட்டிருந்த ஒப்பந்தங்களுக்கு உரியவையாகும். | நிறுத்தப்பட்ட ஒப்பந்தங்களுக்கான காரணங்களைக் கண்டறிவதற்கு மீளாய்வு செய்யப்பட வேண்டும், மேலும் அவற்றைத் தொடங்க முடியவில்லை என்றால், அவற்றை பதிவழிப்பு செய்வதற்கும் வருமானமாக |

எடுத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டம் | | | |
| (i) 6.1 (அ) மற்றும் (ஆ) பிரிவு | சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக 2020 முதல் 2024 வரையிலான காலப்பகுதிக்கான முன்மொழியப்பட்ட நீண்டகால இலக்குகள் மற்றும் நான்கு வருடத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றுலா சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 26(3) ஆம் பிரிவு | இனங்காணப்பட்ட சுற்றுலா வலயங்கள் தொடர்பான பிரதான திட்டங்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பிரகடனப்படுத்தப்பட்ட அந்த வலயங்களுக்குள் மேற்கொள்ளப்படக்கூடிய சுற்றுலா நடவடிக்கைகள், வர்த்தக மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பான விதிமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பணியை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் உள்ளக வளங்களின் பற்றாக்குறையாகும். மேலும் இந்த பணியை மேற்கொள்வதற்கு ADB இன் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கிறோம், அங்கு ஒரு முன்னோடி செயற்திட்டமாக ADB இன் உதவியுடன் 5 வலயங்களுக்காக விரிவான விதிமுறைகள் மற்றும் வழிகாட்டல்களை உருவாக்குவதை நாங்கள் பார்த்து வருகிறோம். இந்த விடயத்தில் ADB இன் பதிலுக்காக நாங்கள் காத்திருக்கிறோம். | பிரகடனப்படுத்தப்பட்ட அந்த வலயங்களுக்குள் மேற்கொள்ளப்படக் கூடிய சுற்றுலா நடவடிக்கைகள், வர்த்தகம் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் தொடர்பான ஒழுங்குமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 48(4) ஆம் பிரிவு | • 2018 ஆகஸ்ட் முதல் 2022 யூலை வரையிலான காலப்பகுதியில் இனங்காணப்பட்ட பதிவு செய்யப்படாத 504 நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரசபையின் அமலாக்கல் பிரிவு முன்மொழிந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான சான்றுகளைச் சேகரிப்பது நிலுவையில் உள்ள நிலையில், அமலாக்கல் நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு நிறுவனம் தற்போது தயாராக உள்ளது. கடந்த 2½ ஆண்டுகளிற்கு மேலாக முக்கியமாக அரசாங்க சுற்றறிக்கைகளின் விளைவாகவும், நிறுவப்பட்ட பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றுவதாலும், அர்த்தமுள்ள நடவடிக்கை எடுப்பதில் இருந்து அதிகாரசபை தடுக்கப்பட்டுள்ளது. | பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | • நுவரெலியா பிரதேசத்தில் உள்ள 106 சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களின் மாதிரிகளில், 62 சதவீதமான 66 நிறுவனங்கள் அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. உண்மையில் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா நிறுவனங்களில் 81 நிறுவனங்கள் மாத்திரமே இருந்த போதிலும் வெளிநாட்டு இணையதளங்களில் பதிவு செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான சுற்றுலா நிறுவனங்கள் இருந்தன. | முறைசாரா துறை தொடர்பாக முறைசாரா துறையின் மீதான தாக்கத்தை தணிப்பதற்கு மூன்று வருட காலத்திற்குள் விசேட பிரிவொன்றை நிறுவுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் (ADB) அதிகாரசபை கோரியது. எனினும், தற்காலிக பதில்களைத் தவிர, சட்டத் துறைக்கு கூட பணியை செயற்திறனாக கையாளுவதற்கு தேவையான திறன் காணப்படவில்லை. மேலும், முறைசாரா துறைக்குள் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கான சில பொறுப்புக்களை சுற்றுலா | சுற்றுலா பயணிகளுக்கு உணவு வழங்கும் நிறுவனங்களை பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பொலிஸாருக்கு அதிகாரசபை வழங்கியுள்ளது. | |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான (SOE) செயற்பாட்டு கையேடு | | | |
| | (i) 2.3 ஆம் பந்தி | அனைத்து SOEs உம் இந்த கையேட்டின் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு ஏற்ப தங்கள் சொந்த நிர்வாக மற்றும் நிதி கையேடுகளை பின்பற்ற வேண்டியதுடன் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனினும், நாளதுவரை அதிகாரசபையால் நிர்வாக மற்றும் நிதி கையேடுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய துறை சார்ந்த ஆலோசனை பெறுகைக் குழு நிதி கையேட்டிற்காக நியமிக்கப்பட்டு தற்போது ஆவண மதிப்பீட்டு நிலையில் உள்ளது. நிர்வாக கையேட்டிற்கான ஆலோசனை திரும்ப அழைக்கப்பட வேண்டும். | இரண்டு கையேடுகளையும் தயாரிப்பதற்கு முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) 3.4 ஆம் பந்தி | அதிகாரசபை நாளதுவரை தொடர் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | தொடர்களை இனங்காண்பது, செயலாற்றலின் அடிப்படையில் பிரிவின் தலைவர் மற்றும் உயர் முகாமைத்துவத்தால் தீர்மானிக்கப்படுகிறது, இந்த செயன்முறை உத்தியோகபூர்வமாக ஆவணப்படுத்தப்படவில்லை அல்லது தெரிவிக்கப்படவில்லை. | தொடர் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதி அமைச்சின் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) | அதிகாரசபையால் 2023 ஆம் ஆண்டில் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு 27 சந்தர்ப்பங்களில் ரூபா 7,571,560 கூட்டுமொத்தமான செயல்நிமித்த உப கட்டுநிதி ரூபா 100,000 வரம்பை மீறி வழங்கப்பட்டிருந்தது. மேலும் 2023 நவம்பர் 06 இல் 960 சபரி ஜீப் சாரதிகளுக்கான பயிற்சி | அசல் விலைப்பட்டியல்கள் நம்பகத்தன்மை இல்லாவிட்டாலும் நிதிப் பிரிவு கலந்துரையாடலில் உள்ளதுடன் மீதமுள்ள 50 சதவீதம் இன்னும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையான அங்கீகாரமின்றி ரூபா 100,000 இற்கு மேல் உபகட்டுநிதி விடுவிக்கப்படக்கூடாது. அசல் மற்றும் நம்பகமான விலைப்பட்டியல்கள் மற்றும் விலைச்சிட்டைகள் |

| | | |
|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டத்திற்காக பெறப்பட்டிருந்த ரூபா 2,432,000 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி நாளதுவரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணப்படும் போது மாத்திரமே தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 751,130,743 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 579,760,623 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 171,370,120 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. குடியகல்வு வரி வருமானம் ரூபா 247,812,538 ஆல் அதிகரித்தமை மற்றும் சுற்றுலா அபிவிருத்தி வரி வருமானம் ரூபா 149,291,525 ஆல் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| யால சுற்றுலா அபிவிருத்தி வலயத்தில் 2014 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 7 கம்பனிகளுக்கு முறையே 35 ஏக்கர் மற்றும் 16.8 ஏக்கர் காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் குத்தகைக்கு வழங்கப்பட்ட 7 கம்பனிகளில் 2 கம்பனிகளே செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. இந்த நிலையில், இயங்காத செயற்பாடுகள், குத்தகை வாடகை நிலுவைகள் மற்றும் குத்தகை ஒப்பந்தத்தை நிறுத்துதல் தொடர்பாக இந்த இயங்காத கம்பனிகளுக்கு எதிராக அதிகாரசபை வழக்கு நடவடிக்கையை எடுத்திருந்தது. குத்தகைதாரர் கம்பனியும் உடன்படிக்கைகளை முடிவுறுத்துவது தொடர்பாக அதிகாரசபைக்கு எதிராக வழக்கைத் தாக்கல் செய்திருந்தது. இந்த அனைத்து வழக்குகள் தொடர்பாகவும் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளாமல், தனியார் சட்டத்தரணிகளின் சேவைகள் பெறப்பட்டு, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சட்டக் கட்டணங்களாக ரூபா 3,475,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த முதலீட்டாளர்களில் மூன்று பேர் ஏற்கனவே ஹோட்டல் செயற்திட்டங்களை தொடங்கி செயற்பட்டு வருகின்றனர். ஒரு கம்பனி 2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கிறது. ஏனைய இரண்டு முதலீட்டாளர்களில் ஒருவர் கடந்த 3 ஆண்டுகளில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் 30% நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்துள்ளார். அதிகாரசபையின் முதலீட்டாளர் உறவுப் பிரிவு (IRU) மூலம் புதிய வடிவமைப்புக்களுக்கான புதிய அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதை அதிகாரசபை மீண்டும் ஆரம்பித்துள்ளது. நீதிமன்ற வழக்குக்கான தனியார் சட்ட சேவைகள் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பெறப்பட்டன. மேலும், நியமிக்கப்பட்ட தனியார் | செயற்திட்டங்களின் செயற்பாடுகள் நெருக்கமாகக் கண்காணிக்கப்பட வேண்டியதுடன் இந்த வழக்குகள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சட்டத்தரணிகள் வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில், 2020 ஒக்தோபரில் அமைச்சரவை அங்கீகரித்த முதலீட்டாளருடன் அதிகாரசபை புதிய குத்தகை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. | |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அதிகாரசபைக்கு சொந்தமான 05 தேசிய விடுமுறை விடுதிகள் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் முறையே ரூபா 50,067,245 மற்றும் ரூபா 51,269,048 நட்டத்தைச் சந்தித்திருந்த போதிலும் அந்த விடுதிகளின் நட்டத்தைக் குறைப்பதற்கு அதிகாரசபை போதிய கவனத்தை செலுத்தியிருக்கவில்லை. | உல்லாச விடுதி முகாமைத்துவ பிரிவு, உற்பத்தித்திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பணியாளர்களின் மாற்றம், வாடிக்கையாளர் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கும் விற்பனையை அதிகரிப்பதற்கும் மெனுக்களை மாற்றுதல் போன்ற பல நடவடிக்கைகளை அமுல்ப்படுத்தியுள்ளது, மேலும் தூய்மையான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட பணிச்சூழலை உறுதிப்படுத்துவதற்காக 5S ஐ அமுல்ப்படுத்துதல் தொடங்கப்பட்டது. | தேசிய விடுமுறை விடுதிகளை இலாபகரமாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2020 ஆம் ஆண்டில் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திடமிருந்து தலைவர் அலுவலகத்தின் அலுவலக உதவி உதவியாளரால் கோரப்பட்ட ரூபா 1,072,102 தொகையான ரோணர்கள் கிடைக்கப்பெற்றிருக்காத போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அது தொடர்பாக உள்ளக விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. எனினும், 2021 ஆகஸ்ட் 05 இல் குறித்த அலுவலக உதவியாளரும் | அதிகாரசபை மற்றும் SLTPB பொது களஞ்சியங்களில் திருடப்பட்ட ரோணர்கள் மற்றும் நகல்பிரதி தாள்கள் சம்பவம் தொடர்பாக அதிகாரசபையில் ஏற்கனவே ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும், அளுத்கடை நீதவான் நீதிமன்றத்தில் | CCTV முறைமையை முறையாக மீளாய்வு செய்வதற்கும், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை பலப்படுத்துவதற்கும் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், |

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு இணைக்கப்பட்ட அலுவலக உதவியாளரும் களஞ்சியங்களில் இருந்த ரூபா 1,234,540 பெறுமதியான நகல்பிரதி தாள்களையும் ரோணர்களையும் திருடிச் சென்றுள்ளனர். புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 198,500 பெறுமதியான மடிக்கணனி 2022 ஆகஸ்ட் 24 இல் உல்லாச விடுதி முகாமைத்துவ பிரிவில் காணாமல் போயிருந்தது. அதன் பிரகாரம், ஆரம்ப முறைப்பாடுகள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளின் பலவீனங்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் தீவிர தலையீடு இல்லாததால் மோசடிகள் தொடர்ந்து நிகழும் சூழல் அதிகாரசபையில் உருவாக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்படுகிறது. | வழக்கு நிலுவையில் உள்ளது.<br><br>சம்பவத்திற்குப் பின்னர், CCTV முறைமை பலப்படுத்தப்பட்டமை மற்றும் பொறுப்புகள் ஒதுக்கப்பட்டமை, பாதுகாப்புப் பணியாளர்களுக்கு விரிவான வழிகாட்டுதல் வழங்கப்பட்டமை என முக்கியமான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன,<br><br>2022 ஆகஸ்ட் மாதத்தில் உல்லாச விடுதி முகாமைத்துவ பிரிவில் உள்ள மடிக்கணனி காணாமல் போன சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அலட்சியத்தின் அடிப்படையில் பொறுப்பான அதிகாரிகளுக்கு குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டு, ஒழுக்காற்று விசாரணை தொடங்கப்பட்டது. | ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் அமுலாக்கல் பிரிவு 2018 ஆகஸ்ட் முதல் 2022 யூலை வரையிலான காலப்பகுதியின் போது சுற்றுலா நிறுவனங்கள் அல்லது சுற்றுலா சேவைகளாகச் செயற்படும் 640 பதிவுசெய்யப்படாத நிறுவனங்களை இனங்கண்டுள்ளதுடன் அவற்றில் 20 நிறுவனங்கள் மாத்திரமே அதிகாரசபையால் அமுல்ப்படுத்தப்பட்ட பிரமாணங்களின் பிரகாரம் 2022 | அமுலாக்கல் பிரிவு பதிவு செய்யப்படாத நிறுவனங்களைக் கண்டறிந்த போதிலும் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதில் தாமதம் ஏற்படுவதற்குப் பல காரணிகள் பங்களிக்கின்றன. எனினும், போதுமான சான்றுகளைத் திரட்ட வேண்டிய தேவையைத் தவிர, அமுலாக்கல் நடவடிக்கைகளைத் தொடர | பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | யூலை 03 வரையிலும் பதிவுசெய்திருந்தன. இந்தப் பிரிவின் செயலாற்றல் தொடர்பாக முகாமைத்துவம் போதுமான மதிப்பீட்டைச் செய்திருக்காததுடன் 2018 ஆகஸ்ட் முதல் 2022 யூலை வரை அந்தப் பிரிவின் ஆலோசகர், விசாரணை அதிகாரி மற்றும் சட்ட ஆலோசகர் ஆகியோருக்கான படிகளாக ரூபா 13,397,500 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | வேண்டிய நிலையில் நிறுவனம் தற்போது உள்ளது. | |
| (ஆ) | பாசிகுடா தேசிய உல்லாச விடுதி வளாகத்தில் உள்ள ஹோட்டல்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு கழிவுநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவுவதற்கு 2011 யூன் 18 இல் தனியார் கம்பனியொன்றுடன் அதிகாரசபை உடன்படிக்கையொன்றை செய்திருந்தது. முறைமையைப் பராமரித்தல், வளாகத்தில் அமைந்துள்ள 14 ஹோட்டல்களில் இருந்து கட்டணத்தை அறவிடுதல் மற்றும் அறவிடப்பட்ட தொகையை மேற்படி தனியார் கம்பனிக்கு செலுத்துதல் என்பன அதிகாரசபையின் பொறுப்புக்களாக இருந்தன. செயற்திட்டத்திற்குத் தேவையான 118 பேர்ச்சஸ் காணியை அதிகாரசபை வழங்கியிருந்தது. 14 ஹோட்டல்களில் இருந்து கம்பனிக்கான கட்டணங்களை அறவிடுதல் மற்றும் பணம் செலுத்துதல் அதிகாரசபையிடம் இருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டு முதல் நாளதுவரை அறவிடப்படாத மீதி ரூபா 412,765,334 ஆகும். எனினும், பெறவேண்டிய தொகையை விஞ்சி ரூபா 421,113,524 தொகையை அதிகாரசபை செலுத்த வேண்டியிருந்தது. 2021 ஏப்ரல் 20 இல் ரூபா 1,644,750 கிரயத்தில் அதிகாரசபைக்கு முறைமையை கையகப்படுத்துவதற்கான மலிவுத்தன்மை பற்றி நிதி ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு தனியார் | இறுதி அறிக்கை 2023 இல் பெறப்பட்டது. ஆலையை அதிகாரசபை கையகப்படுத்துவதற்கு அறிக்கை ஆதரவளிக்காததால், அறிக்கை கண்டுபிடிப்புக்கள் உள்நாட்டில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. பின்னர் லக்தியத மற்றும் அனைத்து ஹோட்டல் உரிமையாளர்களுடனும் ஒரு சாத்தியமான தீர்வை எட்டியது. இதன் விளைவாக, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் இடையே இறுதி உடன்படிக்கை அடைந்துகொள்ளப்பட்டது, அங்கு சேவை வழங்குநர் லக்தியத 2024 சனவரி 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவைத் தொகையிலிருந்து 38% தள்ளுபடியை வழங்கியதுடன் ஆலை மறுசீரமைப்பு பணிக்காக சீர்செய்யப்பட்ட மீதியில் இருந்து ரூபா 70,000,000 ஐ உடனடியாக செலுத்துமாறு SLTDA இடம் கோரியதுடன் மீதமுள்ள மீதியை சமமான மாதாந்த தவணைகளில் தீர்ப்பனவு செய்வதற்கு 3 ஆண்டு (36 மாதங்கள்) கால அவகாசம் வழங்கப்பட்டது. மேலும், 2024 பெப்ரவரி முதல் CSTP சேவைகளுக்கான விலைப்பட்டியலிற்கு CBM ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | விரைவில் இறுதி முடிவுக்கு வந்து, அதிகாரசபைக்கு ஏற்படும் நட்டங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | துறையின் கூட்டுமுயற்சியொன்றிற்கு சலுகைக் கடிதம் வழங்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இறுதி முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1,300,000 நிலையான தொகை + ரூபா 75 மாறும் கிரயம் படி ஹோட்டல்களுக்கு உண்மையான கட்டணம் விதிக்கப்படும். எஞ்சிய 09 வருட ஒப்பந்த காலப்பகுதிக்கு லக்தியத சேவைகளை தொடரும்.<br><br>அதன் பிரகாரம், ரூபா 70,000,000 கொடுப்பனவு லக்தியதவிற்கு மேற்கொள்ளப்பட்டதுடன் இணங்கப்பட்ட மாற்றங்கள் ஏற்கனவே உள்ள உடன்படிக்கையில் சேர்க்கையாக இணைக்கப்பட்டன. ஹோட்டல்களுடனான SLTDA இன் தனிப்பட்ட உடன்படிக்கைகளில் அதே விதிமுறைகளை இணைத்து தொடர்வதற்கு சட்டக் குழு செயற்பட்டு வருகிறது. | |
| (இ) | குச்சவெளியில் அமைந்துள்ள 510.086 ஏக்கர் காணி 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக அதிகாரசபையால் கையகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இவற்றில் 35 ஏக்கர் காணிகள் மாத்திரமே 2020 ஆம் ஆண்டில் 2 கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் 14 ஏக்கர் காணிகள் 2021 மே மாதத்தில் மற்றொரு கம்பனிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 3 குத்தகை கம்பனிகளில் ஒரே ஒரு கம்பனி மாத்திரமே செயற்பாட்டில் இருந்தது. | குறிப்பிட்டவாறு அதிகாரசபையுடன் குத்தகை உடன்படிக்கைகளை செய்துள்ள 3 கம்பனிகளைத் தவிர, இந்த ஆறு முதலீட்டாளர்களுக்காக மொத்தம் 79 ஏக்கர் ஒதுக்கப்பட்ட 3 புதிய முதலீட்டாளர்களுடன் மேலும் 3 குத்தகை உடன்படிக்கைகளையும் அதிகாரசபை கைச்சாத்திட்டது. அதுமட்டுமின்றி, முறையான நடைமுறையைப் பின்பற்றி மேலும் 36 ஏக்கர் காணியை மேலும் 3 முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான அங்கீகாரங்கள் பெறப்பட்டுள்ளன.<br><br>தற்போது, ஒரு முதலீட்டாளர் ஹோட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார், மேலும் | குத்தகை காணிகளுக்கு திறமையான முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும், செயற்பாடுகளை முன்கூட்டியே தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், முதலீட்டாளர்கள் தங்கள் செயற்திட்டங்களை முன்கூட்டியே தொடங்குவதற்கு அத்தியாவசிய வசதிகள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவர்களது செயற்திட்டங்களைச் அமுல்ப்படுத்துவதற்கு ஏனைய 5 ஒப்பந்த முதலீட்டாளர்களுடன் நாங்கள் தொடர்ந்து கலந்துரையாடி வருகிறோம். குச்சவெளி கடற்கரை உல்லாச விடுதிப் பகுதிக்கு நீர் வழங்கல் இல்லாமையே இங்கு எழும் பிரதான பிரச்சனையாகும். இதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையிடம் (NWSDB) கோரிக்கை விடுத்துள்ளோம். | |
| (ஈ) | 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கல்பிட்டியவின் 12 தீவுகளில் 2056.73 ஏக்கர் காணிகளை சுற்றுலா நடவடிக்கைகளுக்காக இலவச மானியமாக அதிகாரசபை பெற்றுள்ளது. அந்த 12 தீவுகளில், 2010, 2011, 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் 10 தீவுகளுக்குச் சொந்தமான 668.69 ஏக்கர் காணிகள் மாத்திரமே 07 கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. எனினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த கம்பனிகள் எதுவும் செயற்படத் தொடங்கியிருக்கவில்லை. மேலும், 2018 முதல் 2024 வரை கல்பிட்டியவில் குத்தகைக்கு விடப்பட்ட 10 தீவுகள் தொடர்பான ஏழு குத்தகைதாரர்களிடமிருந்து ரூபா 92,959,827 தொகையை அதிகாரசபை அறவிடத் தவறியிருந்தது. | முதலீட்டாளர்கள் தண்ணீர் பங்களாக்களுக்கு உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாதமை, மீனவ சமூகங்களின் பிரச்சனை, தீவுகளின் அளவு போதுமானதாக இல்லாதமை போன்ற காரணங்களால் செயற்திட்டங்கள் தாமதமாகியிருந்தன. 2023 மே மாதத்தில் SLTDA 4 முதலீட்டாளர்களுடன் மேலும் 4 குத்தகை உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்தது.<br><br>எனினும், உட்கட்டமைப்பு வரம்புகள் மற்றும் அங்கீகாரங்களில் தாமதங்கள் காரணமாக, தொடங்கப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம் எதிர்பார்த்ததை விட மெதுவாக உள்ளது. | குத்தகை தீவுகளுக்கு திறமையான முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கும், உரிய அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுடன் கூட்டிணைவதற்கும் மற்றும் செயற்பாடுகளை முன்கூட்டியே தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | அதிகாரசபையினால் 2019 இல் ரூபா 61,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மன்னாரில் உள்ள காணியின் உரிமைத்துவத்தை சுவீகரிப்பதற்கு நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ரூபா 61,000,000 தொகை DS மன்னாரில் உள்ள தீம் உல்லாச விடுதியை அபிவிருத்தி செய்வதற்காக அதிகாரசபையால் இனங்காணப்பட்ட காணியை கையகப்படுத்தும் நடவடிக்கையை ஆரம்பிக்கும் | காணி கையகப்படுத்தும் செயன்முறை பின்தொடரப்பட்டு காணி முன்கூட்டியே கையகப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நோக்கத்திற்காக DS மன்னார் நகரத்தில் வைப்பிலிடப்பட்டது. தற்போது பிரிவு 2 அறிவிப்பு வெளியிடப்பட்டதுடன் தடயமறிதல் கணக்கெடுப்பும் பூர்த்தியடைந்திருந்தது. காணி அமைச்சின் செயலாளரின் வேண்டுகோளுக்கு இணங்க DS மன்னார் நகரமானது முன்னோக்கி செல்லும் வழிகள் தொடர்பான மேலதிக தகவல்களை வழங்கியிருந்ததுடன் இந்த விடயம் தொடர்கிறது, அதனை நாங்கள் நெருக்கமாக பின்தொடர்ந்து வருகிறோம். | |
| (ஊ) | ரூபா 39,227,275 தொகையான காணியை கையகப்படுத்துதல் மற்றும் ரூபா 12,264,582 தொகையான கட்டிடங்களின் நிர்மாணம் தொடர்பாக 04 ஆண்டுகளுக்கு முன்னர் செலுத்தப்பட்ட முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த முற்பணங்கள் சுற்றுலா வலய அபிவிருத்தி முற்பணக் கணக்கு - 633 இல் உள்ளன. தெட்டுவ லேக் உல்லாச விடுதி செயற்திட்டம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது. எனினும், DS பெந்தோட்டை மற்றும் CEA இடமிருந்து செயற்திட்டப் பணி நிறைவடைந்ததைக் குறிக்கும் உறுதிப்படுத்தல் கடிதங்களை நாங்கள் இன்னும் பெற்றுக்கொள்ளாததால் இந்தக் கணக்கில் ரூபா 1,109,000 கூட்டுமொத்தம் உள்ளது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏனைய செயற்திட்டங்கள் பூர்த்தியடையும் வரை அவற்றை மூலதனமாக்க முடியாது. இறுதி செய்யப்பட்டவுடன் அவை அதற்கேற்ப மூலதனமாக மாற்றப்படலாம். | கொடுக்கப்பட்ட பணி பூர்த்தியடைந்ததும் முற்பணத்தை உடனடியாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2018 யூன் 06 இல் ரூபா 39,151,500 கூட்டுமொத்த கிரயத்தில் 18 மாதங்களுக்குள் 07 எண்ணிக்கையிலான சுற்றுலா அபிவிருத்தி வலயங்களின் பிரதான | ஆரம்பத்தில் அனைத்து 7 வலயங்களின் பணிகளும் 18 மாத காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உயிர்த்த ஞாயிறு | சுற்றுலா அபிவிருத்தி பிரதான திட்டங்களை முன்கூட்டியே தயாரித்து இறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டங்களை தயாரிப்பதற்காக 2019 பெப்ரவரி 13 இல் அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை (UDA) புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை (MOU) மேற்கொண்டிருந்தது. எனினும், எல்ல மற்றும் அருகம்பே ஆகியவற்றுக்கான இரண்டு பிரதான திட்டங்கள் மாத்திரமே அத் திகதியில் உள்ளவாறு முறையே 2020-2030 மற்றும் 2021-2030 காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டிருந்தன. UDA இற்கு 05 திட்டங்களை தயாரிப்பதற்காக ரூபா 18,400,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மேற்படி திட்டங்களில் செயற்பாடுகள் மற்றும் இலக்குகளுக்கு எதிராக ஒரு திட்டவட்டமான காலப்பகுதி உருவாக்கப்பட்டிருக்காததுடன் இதற்காக அமைச்சகங்களுக்கு இடையிலான குழு நாளதுவரை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த சுற்றுலாப் பகுதிகளில் நீண்டகாலமாக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு பராமரிக்கப்படாமல் இருந்தது. | தாக்குதல்கள், அதைத் தொடர்ந்து கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் பின்னர் நாட்டில் ஏற்பட்ட எரிபொருள்/ பொருளாதார/ மின்சார நெருக்கடி காரணமாக முன்னேற்றம் தாமதமாகியது. இடையில், இந்த செயற்திட்டத்தில் பணிபுரியும் நியமிக்கப்பட்ட UDA குழுவில் மாற்றங்கள் இருந்தன. தற்போது, இந்த சிக்கல்களில் பெரும்பாலானவை தீர்க்கப்பட்டு, 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் UDA மூலம் பணியை பூர்த்திசெய்வதற்கு உத்தேசித்துள்ளோம். ஒவ்வொரு TDMP இலும் அமுல்ப்படுத்துவதற்காக குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை தெளிவாக இனங்காணுமாறு UDA இற்கு கோரிக்கை விடுத்துள்ளோம். TDMPs இன் பிரகாரம் குறித்த பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணங்கள் மூலதனச் செலவினங்களில் அரசாங்கத்தின் கட்டுப்பாடு/ தடுப்பு மற்றும் அமுல்ப்படுத்தும் பெரும்பாலான நிறுவனங்களில் நிதி/ நிதி பற்றாக்குறை என்பனவாகும். UDA இற்கான கொடுப்பனவுகள் தொடர்பாக, மேற்கொள்ளப்படும் பணியின் அடிப்படையில் மாத்திரமே கொடுப்பனவுகள் விடுவிக்கப்படுகின்றன என்பதை குறித்துக் கொள்ளவும். | |
| (ஏ) | அனுராதபுர தேசிய விடுமுறை விடுதி சமீபத்தில் | NHR-அநுராதபுரம் உல்லாச விடுதியுடன் படிப்படியாக | உல்லாச விடுதியின் தரத்தை |

| | | |
|---|---|---|
| பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும் சுவர்களில் அதிகமான நீர் கசிவுகள், தரம் குறைந்த குளியலறை பொருத்துக்களை பயன்படுத்துதல், சேதமடைந்த கதவுகள் மற்றும் உட்கூரைகள் போன்றவற்றின் காரணமாக, கணக்காய்வில் அந்தக் கட்டிடத்தின் பயன்தரு ஆயுட்காலத்தை உத்தரவாதமளிக்க முடியவில்லை. மேலும், 2020 ஆம் ஆண்டு முதல் பல்பணி தொழில்நுட்ப வல்லுநர்கள் இல்லாத காரணத்தால் உல்லாச விடுதியின் பராமரிப்பு சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், உல்லாச விடுதியில் 52 அறைகள் காணப்படுகின்ற போதிலும் CCTV முறைமை மற்றும் மின்பிறப்பாக்கி நிறுவப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உல்லாச விடுதியின் செயற்பாட்டில் ரூபா 8,321,156 நட்டம் ஏற்பட்டிருந்தது. | பராமரிப்பு மற்றும் தர பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதற்கு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். பராமரிப்புப் பணிகளைத் திறமையாகக் கையாள்வதற்கு பல்தர கடமை தொழில்நுட்பவியலாளர் ஒருவரை நியமிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி மனிதவள பிரிவிற்கு பலமுறை தெரிவிப்பதும் இதில் உள்ளடங்குகிறது. மேலும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக வெளித் தரப்பினரை பணிக்கமர்த்தும் செயன்முறையில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம், இது ஒட்டுமொத்த பராமரிப்புத் தரத்தை மேம்படுத்துவதற்கான எங்கள் உறுதிப்பாட்டைக் குறிக்கிறது. | மேம்படுத்துவதற்கும் பராமரிப்பு பிரச்னைகளை தீர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சில ஹோட்டல்கள், உணவகங்கள், பயண முகவர் நிலையங்கள், பங்களாக்கள் மற்றும் விருந்தினர் இல்லங்களின் பதிவானது 2023 ஆம் ஆண்டில் குறித்துரைத்த வழிகாட்டல்கள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளிலிருந்து விலகி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. சுற்றுலாத் துறை சார்ந்த நிறுவனங்களில் நியமம் மற்றும் தரமான வசதிகள் இல்லாததால், அவற்றைப் பயன்படுத்தும் சுற்றுலாப் பயணிகள் அல்லது விருந்தினர்கள் பல பிரச்சனைகளை எதிர்கொள்ள நேரிடும். | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | ஹோட்டல்கள், உணவகங்கள், பயண முகவர் நிலையங்கள், பங்களாக்கள் மற்றும் விருந்தினர் இல்லங்களின் பதிவானது குறித்துரைத்த வழிகாட்டல்கள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றில் இருந்து விலகாமல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பண்டாரவளை தேசிய விடுமுறை விடுதி அதிகாரசபையின் கீழ் பதிவுச் சான்றிதழைப் பெற்றிருந்த போதிலும் பதிவு செய்வதற்குத் | பண்டாரவளை தேசிய விடுமுறை விடுதி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் (SLTDA) | உல்லாச விடுதியை தரம் உயர்த்தி இலாபம் ஈட்டும் அலகாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான தேவைப்பாடுகளை இது பூர்த்தி செய்திருக்கவில்லை. மேலும், இந்த உல்லாச விடுதி சரியான முறையில் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. குடிசை வீடுகள், சமையலறை, பிரதான கட்டிட சிறுவர் பூங்காவின் முகப்பு மற்றும் தோட்டம் என்பன நீண்ட காலமாக திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. தளபாடம் மற்றும் உபகரணங்களும் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது அதிகாரசபைக்கு மோசமான பிம்பத்தை உருவாக்கியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கு ரூபா 3,198,422 நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. | கீழ் பதிவுச் சான்றிதழைப் பெற்றுள்ளது. பதிவு செய்வதற்கான சில அத்தியாவசிய தேவைப்பாடுகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை என தோன்றுகிறது. தற்போது உல்லாச விடுதி முகாமைத்துவ பிரிவு (வியாபார உல்லாச விடுதிகள்) சான்றிதழை பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் உள்ளது. உல்லாச விடுதிகளை புதுப்பிப்பதன் மூலம் தரத்தை உயர்த்துவதற்காக நாங்கள் தற்போது CECB (மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம்) இடமிருந்து சேவைகளைப் பெற்றுள்ளோம். | வேண்டும். |
| (இ) | எல்ல சுற்றுலா வலயத்தின் முக்கிய புள்ளிகளில் தேவையான வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பது தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ராவண எல்ல பிரதேசத்தில் விளக்குகள் மற்றும் சுகாதார வசதிகள் போன்ற வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், எல்ல புகையிரத நிலையத்தில் போதுமான இருக்கை வசதிகள், சுகாதார வசதிகள், சுற்றுலாப் பயணிகளுக்கான தொலைபேசி சார்ஜ் செய்யும் அலகு மற்றும் புகையிரத நேர அட்டவணை காட்சிப்படுத்தல் என்பன காணப்படவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | எல்ல சுற்றுலா அபிவிருத்தி பகுதியில் வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபைக்கு சொந்தமான யால தேசிய பூங்காவிற்கு அருகில் உள்ள உல்லாச விடுதி பகுதியில் உள்ள 50 பேர்ச்சஸ் காணி 2021 ஆம் ஆண்டின் போது சபையின் அங்கீகாரத்துடன் பொது தனியார் | அப்போது குறித்த 'சிறுத்தைப்புலி ஆராய்ச்சி நிலையத்துக்காக' குத்தகை உடன்படிக்கையை கைச்சாத்திட்ட தலைவர் அந்த உடன்படிக்கையில் | அக்கறை முரண்பாட்டுடனான கொடுக்கல்வாங்கல்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்குடமையின் கீழ் சிறுத்தை ஆராய்ச்சி நிலையத்தை நிறுவுவதற்கு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையை கைச்சாத்திடுவதில் உள்ள அக்கறை முரண்பாடு மற்றும் தனியார் கம்பனியை தெரிவுசெய்யும் முறை என்பன கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஈடுபட்ட தனியார் நிறுவனத்திற்கு தொடர்புடைய தரப்பினர் ஒருவராக இருந்தார் என்பது உண்மையாகும். எனினும், இந்த செயற்திட்டம் பற்றிய ஆரம்ப கலந்துரையாடல்கள் 2017 இல் தொடங்கி, 2017-2029 காலப்பகுதியில் தேவையான அனைத்து ஒப்புதல்களும் அங்கீகாரங்களும் பெறப்பட்டன, அங்கு பணிப்பாளர் சபையின் இறுதி அங்கீகாரம் 2019 ஒக்தோபரில் வழங்கப்பட்டது. குறித்த காலப்பகுதியில், கேள்விக்குரிய தலைவர் இணைக்கப்படவில்லை அல்லது அதிகாரத்தின் ஒரு பகுதியாக இல்லை, எனவே இதை அக்கறை முரண்பாடாகக் கருதக்கூடாது என்று நாங்கள் நம்புகிறோம். | |
| (ஆ) | சுற்றுலா நிறுவனங்களின் பதிவு/ புதுப்பித்தல் சான்றிதழ்களில் கையொப்பமிடுவதற்கான அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் அதிகாரம் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு முரணாக 2023 ஏப்ரல் 27 இல் பணிப்பாளருக்கு (நியம மற்றும் தர உத்தரவாதம்) ஒப்படைக்கப்பட்டிருந்தது. | பிரிவு 48(3) சுற்றுலா நிறுவனங்களின் வகைப்பாடுகளின் அடிப்படையில் அதிகாரசபையுடனான பதிவுசெய்தல் செயன்முறை மற்றும் அதிகாரசபையால் உரிமங்களை வழங்குதல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. அதன் பிரகாரம், உரிமம் வழங்கும் அதிகாரம் சபையிடம் உள்ளது. எனவே, இந்த அதிகாரத்தை பணிப்பாளர் SQA இற்கு சபை ஒப்படைத்துள்ளது. பணிப்பாளர் SQA இற்கு அதிகாரத்தை வழங்குவதற்கு பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் அளிக்கும் எந்த ஏற்பாடும் சட்டத்தில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், DG இன் அதிகாரங்களை வழங்குவதற்கான நடைமுறையையும் சட்டம் வரையறுக்கவில்லை. | இந்த விடயத்தில் சட்டமா அதிபரின் கருத்தைப் பெற்றுக்கொள்வது நல்லதாகும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அக்கறை முரண்பாட்டைத் தடுப்பதற்கும் இரகசியத்தைப் பேணுவதற்கும் 2019 நவம்பர் 05 முதல் இந்த அறிக்கை திகதி வரை அதிகாரசபையின் சபைச் செயலாளர் வெளியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். எர்னஸ்ட் & யங் 2019 நவம்பர் 05 முதல் 2023 திசெம்பர் 04 வரை கூட்டமொன்றிற்கு ரூபா 94,500 கிரயப் படி சபைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். எனினும், Legal Inc 2023 திசெம்பர் 05 முதல் 2024 மார்ச் 04 வரை பெறுகை நடைமுறையைப் பின்பற்றாமல் நியமிக்கப்பட்டிருந்ததுடன் தலைவரின் செயலாளரின் உதவியுடனும் E&Y மூலம் மேற்கொள்ளப்பட்ட முன்னைய பணிகளில் பின்பற்றப்பட்டிருக்காத கருத்துடனும் கூட்டமொன்றிற்கு ரூபா 65,000 தொகை படி செலுத்தப்பட்டிருந்தது, மேலும், Legal Inc 2024 மார்ச் 01 முதல் ஒரு வருடத்திற்கு கூட்டமொன்றிற்கு ரூபா 135,000 கிரய படி முறையாக நியமிக்கப்பட்டார். அதற்கு தலைவரின் செயலாளரும் உதவினார். பொது திறைசேரியால் வெளியிடப்பட்ட 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்களின் 2.6 ஆம் பிரிவுக்கு முரணாக சபை செயலகப் பணிகளில் அதிகாரசபையின் எந்த ஒரு பதவியணி உறுப்பினர் தலையீடும் இல்லாமல், அக்கறை முரண்பாட்டைத் தடுப்பதற்கும், அதிகாரசபையின் இரகசியத்தன்மையைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையின் தலைவர் என்ற முறையில், தலைவரின் செயலாளர், LegalInc இற்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், ஏனெனில் அவர் கோரப்பட்ட உதவிகளை வழங்குவதற்குத் தகுதியானவர், உண்மையானவர் மற்றும் நம்பகமானவராவார். | பொதுத் திறைசேரியால் வெளியிடப்பட்ட 2011 நவம்பர் 16 ஆம் திகதிய அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்களின் 2.6 ஆம் பிரிவிற்கு முரணாக சபை செயலகப் பணிகளில் அதிகாரசபையின் எந்தப் பதவியணி உறுப்பினர்களும் தலையிடாமல், அதிகாரசபையின் அக்கறை முரண்பாட்டைத் தடுப்பதற்கும், இரகசியத்தன்மையைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபைக்கு சொந்தமான 37 | கருத்துரை | முதலீட்டு சொத்துக்களை |

| | | | |
|---|---|---|---|
| | விருந்தினர் இல்லங்களில், 9 விருந்தினர் இல்லங்கள் இரண்டு முதல் எட்டு ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கவில்லை, எனவே சொத்து குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | வழங்கப்படவில்லை. | செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தெட்டுவவில் உள்ள சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான காணி சுவீகரிப்பு தொடர்பாக ரூபா 173,159,909 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் காலி மாவட்ட செயலாளரின் 2017 யூன் 20 ஆம் திகதிய டிபிஎஸ்/எல்என்டி/03/பீஏஎன்/பொது ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்கள் அங்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டம் 1 இல் ரூபா 500,000,000 ஐ இலங்கைக்கு மாற்றுவதற்கு அப்போதைய பிரதமர் மற்றும் சுற்றுலா அமைச்சின் நிபந்தனையை நிறைவேற்றத் தவறியதால் மலேசிய முதலீட்டாளர் செயற்திட்டம் இரத்துச் செய்யப்பட்டது. மேலும், முதலீட்டாளர்களை கவரும் வகையில் எல்லை நிர்ணய அனுமதி மற்றும் அத்துமீறலைத் தவிர்ப்பது தொடர்பாக அதிகாரசபை தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. | முதலீட்டு சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பிபில ஓய்வு இல்லம் 17 ஆண்டுகளுக்கும் மேலாக ஆக்கிரமிப்புக்கள் மற்றும் வளாகத்தின் பாதுகாப்பு குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் கைவிடப்பட்டிருந்தது. அதன் மூலம், 2016 நவம்பர் 02 முதல் 2023 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் முதலீட்டாளரிடமிருந்து பெறப்படக்கூடிய ரூபா 10,462,466 தொகையான மொத்த வாடகை வருமானம் மற்றும் ரூபா 40,000,000 பெறுமதியான முதலீடு என்பன அதிகாரசபையால் இழக்கப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, ஓய்வு இல்லத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலும், ஓய்வு இல்லத்தை முறையாக குத்தகைக்கு விட வேண்டும் அல்லது இலாபகரமாக செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |
| (ஈ) | 1993 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்கு மாற்றப்பட்டிருந்த றாகல ஓய்வு இல்லம், 1998 ஆம் ஆண்டில் தனியார் தரப்பினருக்கு ரூபா 5,167 மாதாந்த வாடகையில் குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் இதில் 2001 ஆம் ஆண்டு முதல் | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, ஓய்வு இல்லத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலும், ஓய்வு இல்லத்தை முறையாக குத்தகைக்கு விட |

| | | |
|---|---|---|
| குத்தகைதாரரால் செலுத்தப்படாத ரூபா 697,546 தொகையான மொத்த வாடகை பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் பதிவழிப்பு செய்யப்பட்டிருந்தது. 2010 இல் இந்த வளாகம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, ஓய்வு இல்லத்தின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டது. அதே நேரம், ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்கு 2022 இல் நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 23 இல் கணக்காய்வால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது ஆக்கிரமிப்பு இன்னும் அகற்றப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வின் போது ஓய்வு இல்லத்தின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க முடியாதிருந்தது. | | வேண்டும் அல்லது இலாபகரமாக செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

## 3.7 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலையில் தாமதம்

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | துன்ஹிந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 7,488,133 கிரயத்தில் 20 சுற்றுச்சூழலுக்கு உகந்த கடைகள், கடை ஒன்றிற்கு 02 இருக்கைகள், பாதுகாப்பு வேலி மற்றும் பெயர் பலகையை 2017 பெப்ரவரி 01 முதல் 2017 திசெம்பர் 15 வரை அமைப்பதற்கு அதிகாரசபை திட்டமிட்டிருந்தது. 2018 சனவரி 22 இல் உள்ளவாறு ரூபா 2,864,289 கிரயத்தில் 10 கடைகள் மற்றும் பெயர் பலகை மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டு, நிர்மாணம் கைவிடப்பட்டது. அசல் திட்டத்தில் உள்ள 5 அறைகளின் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்த போதிலும் மீண்டும் அதே செயற்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் மேலும் 5 கடைகளை நிர்மாணிப்பதற்கு அதிகாரசபை முடிவு செய்து ரூபா 2,350,000 தொகையை செலுத்தியிருந்தது. 4 வருட கால தாமதம் காரணமாக ஒரு அறைக்கான கிரயம் ரூபா 272,429 | சொர்ணதோட்டை பிரதேச சபையில் நிதிப் பற்றாக்குறை காரணமாக 10 கடைகள் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் மொத்த செயற்திட்டமும் கிடப்பில் போடப்பட்டது. பின்னர் கொவிட் 19 தொற்றுநோயால் ஒரு வருடத்திற்கும் மேலாக பணி நடைபெற்றது. பின்னர் ஊவா மாகாண சபை அவர்களின் மேற்பார்வையின் கீழ் மிகுதி பணிகளை மேற்கொள்வதற்கு இணங்கியது. டொலர் பற்றாக்குறையால் அனைத்து இறக்குமதி பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்து உள்ளூர் சந்தையில் ஒரு அறைக்கான கிரயம் அதிகரித்திருந்தது. | மூலதன செயற்திட்டங்கள் நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டியதுடன் செலவு குறைந்த முறையில் மூலதன செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதல் ரூபா 470,000 வரை அதிகரித்து மொத்த செலவினம் ரூபா 987,855 ஆல் அதிகரித்திருந்தது. | | |
| (ஆ) | 2021 ஜனவரி 01 இல் யால நுழைவு வாயில் மற்றும் உல்லாச விடுதி அலுவலக கட்டிடத்தை ரூபா 55,000,000 கிரயத்தில் நிர்மாணிப்பதற்கு அதிகாரசபை திட்டமிட்டிருந்தது. வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் முன் அனுமதி இல்லாத காரணத்தினால் அதனை ஆரம்பிக்க முடியவில்லை. | 2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, அனைத்து CAPEX செயற்திட்டங்களும் அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்பட்டதால், இந்த செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. தற்போது 2024 ஆம் ஆண்டில் நுழைவாயிலின் கட்டமைப்புடன் செயற்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு திட்டமிட்டுள்ளோம். நுழைவு கட்டமைப்பிற்குப் பின்னர் அலுவலக கட்டிடம் 2025 இல் திட்டமிடப்படும். | மூலதன செயற்திட்டங்களை நெருக்கமாகப் பின்தொடர்ந்து பயனுள்ள முறையில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 07 மாதங்களாக கேள்வி மதிப்பீட்டில் ஏற்பட்ட தாமதம் மற்றும் ஒரு வருடத்திற்கும் மேலாக வேலைகளை பூர்த்தி செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அனுராதபுர தேசிய விடுமுறை விடுதியின் புனரமைப்பு நீண்ட காலத்திற்குச் செய்யப்பட்டுள்ளது. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த சீரமைப்புக்கான மொத்த கிரயம் ரூபா 81,505,926 ஆகும். இந்த விடுதியின் பௌதீக பரிசோதனையின் போது சாரதிகளின் தங்கும் இடத்தின் சுவர்களில் சில வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மூலதன செயற்திட்டங்களை நெருக்கமாகப் பின்தொடர்ந்து பயனுள்ள முறையில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.8 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் 2023 சனவரி 12 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் 2023 மார்ச் 30 முதல் மீண்டும் பணிக்கமர்த்தப்பட்டிருந்ததுடன், | முறையான ஒழுக்காற்று விசாரணை தொடர்பாக எடுக்கப்பட்ட சூழ்நிலைகள் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றைக் கருத்தில் | ஒழுக்காற்று விசாரணை முன்கூட்டியே பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

குற்றப்பத்திரிகையை வழங்குவதற்கு முறையான ஒழுக்காற்று நடவடிக்கையை தொடங்குவதற்கு உட்பட்டு சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நிலுவை சம்பளம் முழுமையாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ஒரு வருடத்திற்கு மேல் கடந்திருந்த போதிலும் முறையான ஒழுக்காற்று நடவடிக்கை நாளதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கொண்டு, முறையான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டிய தேவைகள் காரணமாக விசாரணை இன்னும் பூர்த்திசெய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்படுகிறது.

எனினும், விசாரணை சரியான முறையில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக சாத்தியமான எல்லா நிகழ்வுகளிலும் நாங்கள் உடனடியாகவும் சரியாகவும் செயற்பட்டுள்ளோம்.